விலை ரூபா 1—25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 25 ர ஆகிர் 8 இதழ் 303

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11-12-1986

உள்ளூராட்சி மட்டத்திலான —

## அதிகாரப் பரவலாக்கத்தையே நாம் ஆதரிக்கின்றோம்-லக்ஷ்மன்

கொழும்பு, புதன்

"அதிகாரப் பரவலாக்கலை நாம் எதிர்க்கவில்லை ஆனால் அந்த அதிகாரப் பரவலாக்கம் உள்ளூராட்சி மட்டத்திலேயே மேற்கொள்ளப்படவேண்டும்".

கொழும்பு பிரதான வீதியிலுள்ள அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி, வாலிபர் ஒன்றியத்தின் தேசிய அத்தனகல எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி இவ்வாறு கூறினார். கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இவ் வைபவத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:

"மாநகரசபை, நகரசபை, கிராமசபை ஆகியவற்றிற்கு பொறுப்பான அமைச்சர் மத்திய அரசாங்கத்திலிருக்க வேண்டும் இந்த அமைச்சர் பதவிக்கு சிறுபான்மை இனத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்

(5-ம் பக்கம் பார்க்க)

## இனமோதலுக்கு இஸ்ரேல் ஒரு சக்தியாக இயங்குகிறது

"இலங்கைக்கு 1983ம் ஆண்டின் பின் நண்பர்கள் இருக்கவில்லை: அடபோது இஸ்ரேல் கைகொடுத்தது" இஸ்ரேல் யுத்த உதவியை இலங்கைக்கு வழங்கியதுடன் நின்று விடாது வேறு துறை

(5ம் பக்கம் பார்க்க)

★ காணமல்போவோர், சித்திரவதை செய்யப்படுவோர் பற்றி விசாரிக்க—

# சுதந்திர விசாரணைக் குழு நியமிக்கவும்-

ஆஸி. பாராளுமன்ற குழு கோரிக்கை

கொழும்பு புதன்

**இலங்கையில் பொதுமக்கள் அடிக்கடி காணமல் போவது பற்றியும் அரசியல் கைதிகள் சித்திரவதை செய்யப்படுவது பற்றியும் விசாரணை நடாத்த சுதந்திரமாக செயற்படக் கூடிய குழு ஒன்றை நியமிக்குமாறு அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஆஸ்திரேலிய பாராளுமன்ற குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

கடந்த மாதம் இலங்கை வந்த இந்த பாராளுமன்ற தூதுக்குழு இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக ஜனாதிபதியுடனும் இலங்கை அரச தரப்பு முக்கிய பல பிரமுகர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்தியது.

இலங்கையில் கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வரும் இனப்படுகொலைகள் அதிகளவில் தமிழர்கள் காணமல் போவது சிறைகளில் நடைபெற்று வரும் சித்திரவதைகள் ஆகியவைகள் பற்றித்தெரிந்துகொண்ட இக்குழு சுதந்திரமாக விசாரணை ஒன்றை நடாத்துமாறு இலங்கை அரசிடம்கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையால் கடந்தசில மாதங்களுக்கு முன் இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்ட இலங்கையில் காணமல் போனவர்கள்" பற்றிய விரிவான அறிக்கையை தொடர்ந்து பல சர்வதேச நாடுகளின் பார்வை இலங்கை பக்கம் திரும்பியுள்ளது

இதனையடுத்து தென் ஆசிய பிராந்தியம் பற்றிய விடயங்களுக்கு பொறுப்பாயுள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ இராணுவத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம், வியா.

தமிழீழ இராணுவத்தினரால் மாதாந்தம் நடாத்தப்பட்டு வரும் தமிழீழ போர் நிதிக்கான 2-வது அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயமுன்றலில் நடைபெற்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

★ இந்தியா குரல் கொடுத்தால்

## இனப்படுகொலைக்கு எதிராக பேச பல நாடுகள் விருப்பம்

— சந்திரஹாசன்

பெங்களூர், டிச. 10

"சர்வதேச அரங்குகளில் இலங்கை இனப்பிரச்னை பற்றி இந்தியா குரல் கொடுத்தால் இனபபடுகொலைக்கு எதிராகப் பேச பல நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக ஈழத்தமிழர் பாதுகாப்பு முன்னணித் தலைவர் திரு எஸ். சி. சந்திரகாசன் தெரிவித்துள்ளார்

அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற இலங்கை இனப் பிரச்னை பற்றிய தேசிய கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே திரு. சந்திரகாசன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்; இலங்கையில இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் பல தாக்குதல்

(8-ம் பக்கம்பார்க்க)

## 4 வீடுகளுக்கு தீ வைப்பு

திருமலை, புதன்.

திருமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமத்தில் ஆயுதப் படையினர் 4 வீடுகளுக்குத் தீ வைத்து எரித்ததாகவும் ஒரு இளம்பெண்ணை மானபங்கப்படுத்திவிட்டு கொலைசெய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

8ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் சுட்டதில் பொதுமக்கள் மூவர் பலி

[எமது நிருபர்]

திருமலைமாவட்டத்தில் நிலாவெளியில் விறகு வெட்டிக்கொண்டு வந்த பொதுமக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 3 பேர் ஸ்தலத்திலே பலியானார்கள்.

மேலும் அச்சமயம் வந்த சிலர் மீதும் இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் பலியானதாகவும் மற்றவர்கள் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நிலாவெளி 10-ம் கட்டையில் இச்சம்பவம் நடைபெற்றது. [மா]

நேற்றைய

## வழித்தடைகளுக்கும் அவ்வூர் மக்களுக்கும் தொடர்பில்லை

-ஈ.பி ஆர்.எல்.எவ்.

யாழ்ப்பாணம், வியா.

போலிஸின் முகத்திரை கிழித்தெறியப்பட்டது என்ற தலைப்பிடப்பட்ட துண்டுப்பிரசுரம் விநியோகித்த இருவர் தம்மால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இத்துண்டுப்பிரசுரம் பல்கலைக்கழக மாணவரின்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் எமது ஸ்தாபனத்தை அவதூறு செய்யும் வகையிலும் அமைந்திருந்ததால் இவர்களைக் கைதுசெய்தோம்.

இவர்கள் இருவரையும் விசாரணை செய்ததில் இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினரும் ஆதரவாளரும் எனத்

[6ம் பக்கம் பார்க்க]

ஒரு தலைமையின் கீழ்——

## அணி திரளவேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், வியா.

"எமது போராளிகளினதும், மக்களினதும் இரத்தத்தாலும் மரணத்தாலும் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிற தமிழீழ வரலாற்றினை கொச்சைப்படுத்தும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருகின்றார்கள். இவற்றை நாம் அனுமதிக்கலாமா?" என்று கிளிநொச்சியில் நடைபெற்ற மாநாடொன்றில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கேட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், "நாம் பல தலைமையின்கீழ் சென்று எமது விடுதலையை பெறமுடியாது. ஒரு தலைமையின் கீழிருந்து அணி திரள வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் இராணுவத்திற்கெதிரான

(5ம் பக்கம் பார்க்க)

## கட்புலன், செவிப்புலனற்றோர் நிலையத்துக்கு ரூ. 25,000

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழீழ இராணுவத்தினரால்; நேற்று அதிஷ்டம் பார்க்கப்பட்ட தமிழ் ஈழப் போர் நிதிக்கான 2 வது சீட்டிழுப்பில் கிடைத்த வருமானத்தில் 25 ஆயிரம் ரூபாவை நவிண்டில் கட்புலன் செவிப்புலனற்றோர் நிலையத்துக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்ற

[5ம் பக்கம் பார்க்க]

கொழும்பிலிருந்து —

## யாழ். வந்த தனியார் பஸ் மீது கல் வீச்சு

யாழ்ப்பாணம், வியா.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பிரயாணிகள் பஸ் ஒன்று மாரவில என்ற இடத்தில் கல்வீச்சுக்கு இலக்கானதில் பஸ் சாரதி சிறு காயங்களுக்குள்ளானார்

நேற்றுக்காலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம்நோக்கி வந்துகொண்டிருந்த இத்தனியார் பஸ் வண்டி சிலாபத்துக்கும் யாஎல என்னும் இடத்திற்குமிடையில் உள்ள 'மரவில' என்னும் இடத்திலேயே கல்வீச்சிற்கிலக்கானது.

இந்த பஸ் வண்டியில் பிரயாணம் செய்த சகல பிரயாணிகளும் எதுவித காயங்களுமின்றி பிறிதொரு பஸ் மூலம் யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தனர்.

சிறு காயங்களுக்கிலக்கான பஸ் சாரதியும் பஸ் வண்டியுடன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். [வா]

தமிழ்நாட்டில்

## பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்த அரசு உத்தரவு

சென்னை, டிச. 10

தமிழ்நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துமாறு மாநிலஅரசு உத்தரவிட்டுள்ளது.

ஹிந்தி எதிர்ப்பு போராட்டம் தொடர்பாக நேற்றுமுன்தினம் தி மு க. தலைவர் திரு மு. கருணாநிதி உட்பட கட்சித் தொண்டர்கள் ஐயாயிரம் பேர் கைது செய்யப்பட்டதை எதிர்த்து மாநிலத்தில் அரசு உடமைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுவருவதையடுத்தே

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: S. உருத்திரன், மணியகாறன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (C6287)

நல்லநிலையிலுள்ள EN 000, 7200 வீடியோ டெக் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இல 7/5, பிறவுண் வீதி, 1ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [C 6288]

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001. [C6299]

மெய்கண்டான் கலண்டர், டயறிகள் பெருந்தொகையாக விற்பனைக்குண்டு, வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். விலை No 1 - 29 50 No 2 - 27 50 மகிமிலன் புத்தகசாலை 3 பஸ் நிலையம் யாழ்ப்பாணம். (C 6165)

நீர்வேலிச் சந்திக்கு அருகாமையில் யாழ் பருத்தித்துறை வீதியில் (.2 கி மீ. போஸ்ட் முன்பாக) சகல வசதிகளுடன் வீடும், காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு. எஸ். பி. ஜெயம், நீர்வேலி. (C 6190)

சகல விதமான றேடியோ உதிரிப்பாகங்கள், ரெலிவிசன் துணைப்பாகங்கள் விற்பனைக்குண்டு. திருத்துனர்களுக்கு விசேட கழிவுண்டு நியூ சிற்றி றேடரீஸ், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், போன்: 24055 [A3307]

## தேவை

சிறந்தமுறையில் மணிக்கூடு திருத்துபவர்கள் உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். தேவன் எண்டர்பிறைஸ், [தேவன் வோச் வேக்ஸ்] 64, பஸ்நிலையம், சுன்னாகம். (C6178)

சிறிய மாட்டுப்பட்டி பராமரிக்கக்கூடிய அனுபவமுள்ள தனியாள் ஒருவர் உடனடியாகத் தேவை தங்கவசதியுண்டு. நேரில் வரவும். இல: 3, கோபால் ஒழுங்கை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C6286]

வருகிற மாதம் மானிப்பாயில் புதிதாக ஆரம்பமாகவிருக்கும் G C E [A/L] வர்த்தக வகுப்புகளுக்கு அனுபவமுள்ள ஆசிரியர்கள் தேவை. தற்போதைய படிப்பித்தல், எதிர்பார்க்கும் சம்பளம் ஆகியவை அடங்கிய முழு விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல C 6266, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். [C6266]

## WANTED

Wanted qualified andexperienced tutors for next month newly commencing Computer programming and A A T. classes in Manipay. Apply immediately with all details including present position, expected payments, available days etc. Advt No. C6265 C/o Eelanadu, Jaffna. [C6265]

## சேவை

சகல கலர் பிலிம் சுருள்களையும் Printing செய்துகொள்ளுங்கள். Post Card Colour Print 4/90 மட்டுமே Free Processing. Quick Star, 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 6237)

## வகுப்புகள்

A/L 87 துரிதமீட்டல் வகுப்புகள் [Paper Class] ஆரம்பமாகின்றன விலங்கியல் தம்பிராஜா. Tue and Fri. 6-15 7-15 9-12-86) தாவரவியல் ஆசிரியர் சிவவீரசிங்கம் Mon.- Wed 6-30—7-30 (10 12-86) 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (P. M. C முன்பாக) (C-6242)

## தவறிவிட்டது

நாதன் றேடிங்கோகடைக்கு சொந்தமான திறப்புக்கோர்வை 9-12-86 இல் தவறிவிட்டது இதைக் கண்டவர்கள் M. பிறையணிநாதன், 412 ரெம்பிள் றோட், நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [C6291]

## ஈராண்டு நினைவஞ்சலி



செல்வன்
வாமதேவா
ஞானகணேஸ்
(பாபுஜி)
(யாழ். இந்துக்கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவன்)

அன்னையின் மடியில்: 9-5-1967
அரக்கர் அழிப்பில் 11-12-1984.

பெற்றெடுத்த அன்னை உன்னை நெற்றித் திலகமிட்டு
போருக்கு அனுப்பவில்லை
போய் வாமகனே என்று
எதிரியின் குண்டு உன்
நெற்றியில் பாய்ந்த
போது - இரத்தத்
திலகமாய் அதை ஏற்றுக்
கொண்டாயோ
எமை விட்டு நீ சென்று
ஈராண்டு ஆனாலென்ன
எம் இதயம் ஓயும் வரை
மறையாது உன் உருவம்
பாசத்துடன் வேண்டு
கின்றோம்
உன் ஆத்ம சாந்தியினை - ஆனால்
பரிதவிக்கும் நமக்கிங்கு
கிடைத்ததில்லை மனச்
சாந்தி.
சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவுத் துயரால் வாடும் அம்மா, அண்ணன்மார், அத்தான்மார், மருமக்கள், [உறவினர், நண்பர்கள்.
"திருப்பதி"
பொன்னாலை சுளிபுரம்,
11-12-86.
(A 3309)

## அரசாங்க அறிவித்தல்
### சுகாதார திணைக்களம் யாழ்ப்பாணம்

01-01-87 தொடக்கம் 31-12 87 வரைக்கும் யாழ்ப்பாணம் பெரும்பாகத்திலுள்ள நிலையங்களுக்கு பொதிகளை எடுத்துச்செல்வதற்கான உள்ளூர் கேள்விகள் 30-12-86 முற்பகல் 10-00 மணிவரை யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை இப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள்,
பிராந்தியப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.
[A-3311]

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கந்தையா செல்வரத்தினம் பெண் தங்கமணியின் மரண சாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

மரணசாதன
நியாயாதிக்கம்
1/3989

கந்தையா செல்வரத்தினம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

மனுதாரர்.

எதிராக

1. செல்வரத்தினம் திருச்செல்வம்
2. கந்தையா செல்வரத்தினம் மகள் சாந்தினி கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (பராயமற்றவர்)
3. செல்வரத்தினம் செந்திற்செல்வம் எரிறுஸ் ரெல்க், இல. 51,1000, கிழக்கு பேளின், ஜேர்மனி. (பராயமற்றவர்)
4. செல்லையா சின்னத்துரை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (4ம் எதிராளி) பராயமற்ற 2ம். 3ம் எதிர்வாதிகளின் சட்டப் பாதுகாவலராக

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு ஐப்பசி மீ 31ந் திகதி முற்பகல் 9 00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

இன்று 1986 ஆண்டு புரட்டாதி மாதம் 12ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்
பொ. நவரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
31-10-86

தவணை 86-12-19ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.
[C-6278]


## குருபாவா சமாதி அடைந்தார்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் குருபாவா ஆச்சிரமத்தைச் சேர்ந்தவரான அதிசங்கைக்குரிய பாவா முகைதீன் குருபாவா சுவாமிகள் சமாதியடைந்து விட்டார்.

குருபாவா சுவாமிகள் அமெரிக்காவில் பிளடெல்பியாவிலுள்ள தமது ஆச்சிரமத்தில் கடந்த 9ம் திகதி சமாதியடைந்ததாக அவரது யாழ்ப்பாண சீடர்கள் தெரிவிக்கின்றனர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



G. இரவிமூர்த்தி
ஆண்டவன் படைப்பு 19-4-1960
ஆள்பவன் [?] பறிப்பு 11-4-1985

நண்பா!
உன்னை கொண்டவனும்
இங்கில்லை
கொன்றவனும்
இங்கில்லை
கொன்றவனும்?
கொன்றவனைக்கொண்ட
வனும்
கொண்டபயன் ஏதுமில்லை
இந்தமரணவியாபகத்தில்
முதலை இழந்து
முழுகிப் போனவர்கள்
நாம் மட்டுமல்ல
நண்பா,
நாம் மட்டுமல்ல.

நண்பர்கள்.
(C 6197)

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



உயர் திரு. கறுப்பையா தம்பதிகளின் மகன்
அச்சுதன்
(ஆச்சாரி)
(யூ. கே. இன்டஸ்றீஸ் அதிபர்)
தோற்றம்: 1 - 7 - 1951
மறைவு: 4 - 2 - 1984
திதி: 11 - 12 - 86.

உயிலங்குளம் (மன்னார்) மண்ணிலே வளமாய் வாழ்ந்து, அன்பிற்கும், அறிவிற்கும் இலக்கணமாய் திகழ்ந்து பிற உயிருக்காக தன் உயிரைப் பறிகொடுத்த எங்கள் தெய்வமே, உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி: அ. பத்மாதேவி,
பிள்ளைகள்:
1. அ. பகீரதன்,
2. அ. கிரிதரன்;
531, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(C 6281)

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா

தையிட்டி ஊறணி பிரஜைகள் குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவானார்கள்.

காப்பாளர்கள்: அருட்திரு ரி. இ. தேவராஜன், அருட்திரு. சந்தியாப்பிள்ளை, தலைவர்; எஸ். நாகரத்தினம், செயலாளர்; சி. சத்தியசீலன் பொருளாளர், அ. அருளானந்தம், மற்றும் நிர்வாக சபை ஊழியர்களாக ஏழுபேர் தெரிவானார்கள்.

## பூரண ஒத்துழைப்பு வழங்கவும்

யாழ்ப்பாணம். வியா.

யாழ் குடாநாட்டினுள் முப்படைகளும் மிகப்பெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளத் தயாரிபடுத்திவருவதாகவும், இப்பெருந்தாக்குதலை முறியடிக்க மக்கள் தம்முடன் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் தமிழீழ விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முப்படைகளின் தாக்குதல் நடைபெறும் சமயத்தில் மக்கள் தற்காப்பு யுத்தத்துக்கான நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் விடுதலைப்புலிகள் அவ்வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர். (மா)

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. சின்னத்தம்பி வல்லிபுரம்
மலர்வு: 1-12-1920
உதிர்வு: 22-11-1985
திதி: ஏகாதசி

பண்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாயிருந்து எம்மையெல்லாம் அன்புடன் வழி நடத்திவைத்த எமது குலதெய்வம் மறைந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகியும் அவரின் நினைவு எங்களை விட்டு என்றும் நீங்காது. அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவடியை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பெறுமக்கள்.
"முருகன் இல்லம்"
தும்பளை,
பருத்தித்துறை.
(C 6297)

● ஈரான் இரகசிய ஆயுத விநியோகம்:

# றீகன் நிர்வாக வெளியுறவு ஸ்திரத்தை பேண ஷூல்ஸ் லண்டன் பயணம்!

லண்டன், டிச 10

**றீகன்நிர்வாகத்தின் வெளியுறவு ஸ்திரத்தன்மையைக் காப்பாற்றும் வகையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு ஜோர்ஜ்ஷூல்ஸ் தமது ஐரோப்பிய சகாக்களையும், மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்க தூதுவர்களையும் சந்தித்துவருகின்றார்.**

ஈரானுக்கான இரகசிய ஆயுத விவகாரத்தில் அதிபர் றீகனின் வெளிநாட்டுக்கொள்கைகள் களங்கமடையக் கூடாதென்பதே திரு ஷூல்ஸின் இந்த நடவடிக்கையின்முக்கிய நோக்கமாகும்.

திரு: ஷூல்ஸ் லண்டனில் நேற்று பிரிட்டிஷ், பிரெஞ்சு மே. ஜெர்மன் வெளிநாட்டமைச்சர்களைச்சந்தித்து ஈரானுக்கான இரகசிய ஆயுத விநியோகம் தொடர்பாக றீகனின் நிலைப்பாட்டை அவர்களிடம் விளக்கிக் கூறினார்.

தொடர்ந்து அவர் மத்திய

உலகச் செய்திகள்

கிழக்கு நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதர்களையும் லண்டனில் சந்தித்து இவ்விடயம் குறித்து அவர்கள் கடமைபுரியும் நாடுகளில் எவ்வளவு தூரம் தாக்கம் ஏற்பட்டுள்ளதென்பதையும் அறிந்து கொண்டார்.

திரு. ஷூல்ஸ் நேட்டோ அமைப்பு உறுப்பினர்களையும் சந்தித்து ஈரானுக்கான இரகசிய ஆயுதவிநியோகம் குறித்த விடயத்தை விளக்குவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஈரானுக்கான இரகசிய ஆயுதவிநியோகம் குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. ஜோர்ஜ்ஷூல்ஸ் கண்டனம் வெளியிட்டபோதிலும், றீகன் நிர்வாகத்தின் ஒரு சிரேஷ்ட அங்கத்தவன் என்றரீதியில் அவர் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை ஸ்திரமடையச் செய்வதில் ஆர்வம்காட்டிவருகிறார்.

## பம்பாய் விமான நிலையத்தில் திடீர் வேலை நிறுத்தம்!

### 4 ஆயிரம் பயணிகள் பாதிப்பு

பம்பாய், டிச 10

பம்பாய் சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுதிடீரென இடம்பெற்ற வேலைநிறுத்தத்தின் விளைவாக 4 ஆயிரம் விமானப்பயணிகள் பாதிப்படைய நேரிட்டது.

சுமார் ஆறுமணிநேரம்இந்த வேலைநிறுத்தம் ஏற்பட்டது. பம்பாய் விமானநிலைய அலுவலர் ஒருவருக்கும் பொலிஸ்காரர் ஒருவருக்கும்மிடையே ஏற்பட்ட தகராறு ஒன்றையடுத்தே இத்திடீர் வேலை நிறுத்தம் ஏற்பட்டது.

இவ்வேலைநிறுத்தம் காரணமாக பம்பாய் விமானநிலையத்தின் உள்நாட்டு வெளிநாட்டு விமானச் சேவைகள் யாவும் இடை நிறுத்தப்பட்டன.

சிவில்விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு ஜகதீஷ் டெய்ட்லர் பம்பாய விமான நிலையம்வந்து இவ்விவகாரத்தில் தலையிடுவார் என அறிவிக்கப்பட்டதையடுத்தே இவ் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

## லெபனானின் பத்திரிகையே முதலில் அம்பலப்படுத்தியது

பெய்ரூட் டிச 1

லெபனானிலிருந்து வெளியாகும் 'அல்-சைரா'என்ற வாரப்பத்திரிகையே அமெரிக்காவின் ஈரானுக்கான இரகசிய ஆயுத விநியோகத்தைமுதல் தடவையாக அம்பலப்படுத்தியது

ஹசன் சாப்ரா [வயது 38] என்ற இப்பத்திரிகை ஆசிரியரே இந்த விவகாரத்தை அம்பலப்படுத்திய முதல் நபராவார்.

கடந்த நவம்பர் 4ந்திகதி முதல் தடவையாக ஈரானுக்கான இரகசிய ஆயுதவிநியோகம் குறித்த தகவலை 'அல்-சைரா' பத்திரிகையே வெளியிட்டது

இதன் ஆசிரியர் ஹசன் சாப்ரா இவ்விவகாரம் குறித்து தாம் எப்படி அறிந்தார் என்பதனைத் தெரிவிக்கையில்! ஈரானின் உயர் மட்ட ஆட்சியாளர்களுடன் தாம் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்ததாகவும், அவர்களில் சிலர் ஈரானியத் தலைவர் ஆயதுல்லா கொமெய்னியின் சிரேஷ்ட உதவியாளர்கள் எனவும் தெரிவித்தார்.

இவர்களில் ஒருவரான ஷேக் ஹாஷமி என்பவர் றீகன் நிர்வாகத்தின் பிரதான எதிரியெனவும் அவரே இந்த இரசிய ஆயுத விநியோகம் குறித்து முழுத் தகவல்களையும் வெளியிட்டார்" என்றார்.

## 12 எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதி

யாழ்ப்பாணம், வியா.

கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கூட்டுறவுக் கலாசாரப் பெருமன்றத்தின் முதலாவது வெளியீடான பன்னிரண்டு எழுத்தாளர்களின் சிறுகதைகளும் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் 'விமர்சன மதிப்பீடும்' கொண்ட 'உயிர்ப்புகள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா வரும் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப 2.00 மணியளவில் நெல்லியடியிலுள்ள கட்டைவேலி- நெல்லியடி ப. நோ. கூ. ச. பணிமனை மண்டபத்தில் மன்றத் தலைவர் திரு த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் கா சிவத்தம்பி. பண்டிதர் க. வீரகத்தி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா சிறப்புரை நிகழ்த்துவார். திரு கே. தங்கவடிவேல் வெளியீட்டுரையையும் வைத்திய கலாநிதி எம். கே முருகானந்தன், திருமதி கோகிலா மகேந்திரன் திருவிலா ரத்தினம், திரு எஸ் திருச்செல்வம் ஆகியோர் ஆய்வுரைகளையும் நிகழ்த்தவுள்ளனர் நூலாசிரியர்கள் பன்னிருவரின் சார்பில் திருவாளர்கள் தெணியான் குப்பிழான் ஐ. சண்முகன் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

யாழ் குடாநாட்டின் சகல எழுத்தாளர்களையும், இலக்கிய ரசிகர்களையும் இந்த வைபவத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு பன்னிரண்டு எழுத்தாளர்கள் சார்பிலும் அமைப்பாளர் திரு நெல்லை க. பேரன், சங்கத் தலைவர் திரு. த சிதம்பரப்பிள்ளை ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர் தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

## கடலில் பாரிய கப்பல்

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவு தென்மேற்குக் கடலில் பாரிய கப்பல் ஒன்று கடந்த சிலநாட்களாக நங்கூரமிட்டு தரித்துள்ளது.

கடற்படைப் படகுகளும், விசைப்படகுகளும் தீவிரரோந்தில் இரவு பகலாக ஈடுபட்டு வருவதுடன் இடையிடையே "ஹெலி"யும் தீவுப்பகுதிகளில் தாழப்பறந்து வலம்வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. (எ)

பிலிப்பைன்ஸில்————

## அரச - கம்யூனிஸ்ட் படைகள் போர் நிறுத்தம்!

மணிலா, டிச 10

திருமதி கொரஸோன் அக்கினோ தலைமையிலான பிலிப்பைன்ஸ் அரசாங்கமும், கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்களும் முதல்தடவையாக யுத்த நிறுத்தமொன்றுக்கு இணங்கியுள்ளனர்.

கடந்த 4 மாத காலமாக இரு தரப்பினருக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்களையடுத்தே போர் நிறுத்தத்துக்கு இருசாராரும் இணங்கிக் கொண்டனர்.

கடந்த 17 வருட காலமாக கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் பிலிப்பைன்ஸ் அரசுடன் மோதிவருவது தெரிந்ததே.

நேற்று அறிவிக்கப்பட்டுள்ள யுத்தநிறுத்தம இருமாதங்களுக்கு அதாவது 60 தினங்களுக்கு நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இவ்விருமாத கால இடைவெளியின்போது பிலிப்பைன்ஸ் அதிபர் திருமதி அக்கினோ கிளர்ச்சியாளர்களுடனான சமாதானப்பேச்சுவார்த்தைகளில் தீவிரமாக ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.


ENJOY LIFE IT IS WORTH LIVING

R.S.R.GREEN PEKING PALACE

CHINESE MEALS, HOT DRINKS, COOL DRINKS HOT HOT SHORT EATS, ICE CREAM, இவைகளுடன் Etc Etc Etc Etc.

உங்கள் உடம்புக்கு செவ்வை அளிக்க உங்களுக்காகவே தயாரிக்கப்பட்ட SOUPS வகைகளையும். நசரிலே உடனுக்குடன் உங்கள் முன்னிலையிலே செய்துகொடுப்பவர்கள்




R. S. R. GREEN PEKING PALACE

69 G, 4th Cross Street, Jaffna.

[A 3236]



## தேவை

நவாலி மகேஸ்வர இல்லத்திற்கு ஒரு பூகாமையாளரும் ஒருசமையற்காரரும் (ஆண்கள்) 50-60 வயதுக்குட்பட்டோர் தேவை.

20-12-86க்குமுன் விண்ணப்பிக்கவும். திறமையையும். அனுபவத்தையும் பொறுத்து ஊதியம் நிச்சயிக்கப்படும் இருப்பிட வசதியும் இலவச உணவும் வழங்கப்படும்.

தலைவர்.

'மகேஸ்வர இல்லம்'

[அனாதைப் பிள்ளைகளுக்கு]

நவாலி, மானிப்பாய்.

(C6268)

**மணிவாக்கு**

ஊன்கெட்டு உயிர்கெட்டு
உணர்வுகெட்டு என் உள்ளமும்போய்
நான்கெட்ட வா பாடித
தெள்ளேணம் கொட்டாமோ
—மாணிக்கவாசகர்

# நமது நோக்கு

## 'பிரம்மா' ஆட்சிமுடிவில் 'காளி' ஆட்சிக்கு என்கோர்?

'சூரபத்மாவே! உற்றதோர் மேன்மைநாடி உன்னைநீ பிரமம் என்றே தேற்றெனத் தெளிநீ' என்று சுக்கிரன் செய்த உபதேசத்தில் "கொலை களவு காமம் குறித்திரு வஞ்சமெல்லாம் நிலையெனப் புரிதி" என்று சூரனுக்கு உறுதியளிக்கிறார். "உன்னைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ இரண்டாவது பிரமம் இல்லை" என்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் அநுரா இன்றைய ஆட்சிக்கு வழங்கும் உபதேசம் இது போலிருக்கிறது.

'வடக்கு கிழக்கில் அமைதியை நிலைநாட்ட 'பிரம்மா' ஆட்சி முயற்சி எடுக்கும். இங்கு காணப்படும் பயங்கரவாதம் உலகம் முழுவதும் காணப்படுகிறது நாட்டுக்குப் பெருஞ் செலவுதான். ஆனால் அதை இறுக்க எங்களால் முடிகிறது அதுவே அற்புதம்" என்கிறார் ஆட்சித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா

இதற்கிடையில் பயங்கரவாதிகளுக்கு இறுதி 'நொக்கவுட்' கொடுக்க அமெரிக்கா சென்றிருக்கிறார் பாதுகாப்பு அமைச்சர். போரில் மூன்று முனைகள்; ஆயுதப் பிரயோகம், அரசியல் பரிகாரம், எதிர்ப்பிரசாரம்; முன்னிரண்டிலும் வெற்றி தென்படும் வேளையில், பொய்ப்பிரசாரத்தை முறியடித்து அதிலும் வெற்றி பெற பாதுகாப்பு அமைச்சர் அமெரிக்கா சென்றிருக்கிறார்.

'ஈரான் கேட்டும்' அதில் தொடர்பான பொய்ப் பிரசாரங்களும் அமெரிக்க காங்கிரஸில் காரசாரமாக பிரஸ்தாபிக்கப்படும் வேளையில் இந்தச் சிறுநாட்டின் இருந்தலையிடியான 'தமிழர் பொய்ப்பிரசாரத்தை' தவிடுபொடியாக்கும் பயணம் அமெரிக்காவிற்கென்பது துரதிஷ்டம்.

போரின் முடிவு என்னவானாலும் அது வடக்கையும் கிழக்கையும் பொறுத்ததே; மக்களை (தென்னிலங்கை) பட்டினிபோடோமென்கிறார் ஆட்சியின் விஷ்ணு அமைச்சர் ஜேனி, தென்னிலங்கை மக்களுக்கு ஆட்சியை மாற்றி அமைக்கும் அனுபவமில்லாதது போல் ஜனாதிபதி நிகழ்த்திய பேச்சில, நடந்த பொதுஜன வாக்கெடுப்பில் காரணம் இருப்பது மக்களின் வயிற்றுக்குப் பாதகமாகாது. ஆனால் பட்டினி ஆட்சி மீண்டும் தலையெடுக்காமல் தடுக்கவல்லதே எம் 'ஆட்சி' என்கிறார் ஜனாதிபதி.

'காளி ஆட்சி'யின் மறுமலர்ச்சி முயற்கொப்பு என்ற பிரசாரத்தில் ஒரு பலவீனம் இருப்பதாகத் தெரிகிறது.

தாயின் ஆட்சிபற்றி நேரில் அறிவதைவிட மனின் உள்ளக்கிடக்கை வழிகாட்டவல்லது.

"பயங்கரவாதத்தை முறியடிக்க யுத்தத்தைத் தவிர வேறு வழியில்லை; நாம் ஆட்சிக்கு வந்தால் யாழ்ப்பாணத்தில் சிங்களவர்களைக் குடியேற்றுவோம்" என்கிறார் சுக்கிராச்சாரியார் அநுரா.

வெறும் 'பொடியன்' என்று எவரையும் இன்று ஏளனம்செய்வது மடமை. 'பொடியன்கள்' என்ற பதம் 'சிங்களம் மட்டும்' என்ற நாடு உட்பட உலகில் பல நாடுகளில் புழக்கம் பெற்றிருக்கிறது.

யாழ்ப்பாணம் வந்து, அமரர் மேயர் துரையப்பாவின் விருந்தோம்பலில் யாழ்ப்பாண அரசியற் சிக்கல்களை நேரில் கண்டறிந்த அநுரா, இன்று எதிர்க்கட்சித் தலைவராக உலகவிவகாரங்களில் அனுபவம்பெற்ற அரசியல்வாதி.

பிரதமர் ராஜீவ் காந்திக்கே இல்லாத தகைமைகள் அநுராவுக்கு இருப்பதால் இளைஞன் அநுரா ஒரு காலத்தில் நாட்டின் அதிஉத்தம ஜனாதிபதியாகவரும் வாய்ப்புடையவர்.

அன்னையும் பிதாவும் அவருக்கு முன்னறி தெய்வமென்பது ஒருபுறமிருக்க, இருவரும் நாட்டின் பிரதமர்களாகப் பல்லாண்டு ஆட்சிபுரிந்தவர்கள் எனவே 'காளி' ஆட்சி மூன்றாவது முறை வேறு வடிவெடுக்கலாம்.

நீண்டநேரம் தமிழ் மக்களுக்கு வடக்கு-கிழக்கு விடயத்திற்கு அவசியமற்ற வியாக்கியானத்தில் நாம் ஈடுபட்டிருப்பதாக வாசகர் வேதனைப்படுவர்.

அப்படியல்ல; யுத்தமே முடிவுகட்டுமென்று அநுரா சொல்லும்போது 'நானே பிரமம்' என்ற முனைப்புக்கு இது நல்ல உணவெனநினைக்கிறார் தமிழர்களைப் பல்லாயிரக்கணக்கில் சுட்டுத் தள்ளமுன்னரே காளிஆட்சி உதயமாகலாம். தாயோ, சேயோ, தமிழ் மக்களை அழிப்பதில் பிரச்சினை தீராதென்ற அரசியல் ஞானம் படைத்தவர்கள் சிங்கள பௌத்த சமுதாயத்தின் அத்தியாரத்துக்கு உறுதியளிக்கவல்லவர்கள் என்ற விசுவாசம் பெற்றவர்கள்.

திருவெம்பாவைக் காலம் இது கோயில்களில் திருவாதவூரர் புராணம் குறிப்பாக புத்தரை வாதில் வென்ற சருக்கம் பக்திசிரத்தையுடன் படிக்கப்படுகின்றது. இருப்பினும் தமிழ்மக்கள் சிங்கள மக்களின் சத்துராதிகள் அல்ல என்பதைப் பௌத்த சங்கத்திற்கு விளக்கவல்ல செல்வாக்கு 'காளி ஆட்சி'க்கு உண்டு தீராத தமிழ் மாநிலப் பிரச்சினையைத் தீர்க்கவல்ல தந்திரம் போரை ஒழிக்கவல்லது

தமிழருக்குச் சுயாட்சியா? அதனை வழங்கும் ஆற்றலை உடைய ஆட்சியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கருத்து தேர்தற் பிரசாரத்திற் தொக்கிநிற்கிறது.

தமிழ் மாநிலம் தமிழர் கைக்கு வந்தால் சிங்கள மக்கள் முன்னர்போல் யாழ்ப்பாணத்தில் குடியேற முடியுமென்பது அநுராவின் சிலேடைப் பேச்சில தெரிகிறது

பிரம்மாவோ காளியோ, ராமனோ ராவணனோ தமிழ் மாநிலத்தைத் தமிழர் கைக்களித்தால் இலங்கை தப்ப வழியுண்டு.

---

### இன்று ஹன்டி பேரின்பநாயகம் நினைவுதினம்:

# "அவர்களை என்றால் மறக்க முடியாது"

இலங்கைக்கல்வித் திணைக்களத்திலே பாடநூல் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய பின்பு, ஆட்சிமொழித் திணைக்கள ஆராய்ச்சிப்பிரிவில் ஆராய்ச்சி உதவியாளனாக யான் கடமையாற்றிச் சொல்லாக்க பணிபுரிந்துகொண்டிருந்த காலத்தினை என் வாழ்க்கையின் பொற்காலம் எனக் கருதுகின்றேன். என் தந்தையாருடன் பல்லாண்டுகளாக உறவு கொண்டாடிப்பழகிவந்த நண்பர்களும்பேரறிஞர்களும்பலர்.



அக்காலத்திலே அத்திணைக்களத்துச் சொல்லாய்வுக் குழுக்களிலே மேற்பார்வையாளராக விளங்கி ஆக்கமும் ஊக்கமும் தெளிவும் அளித்து வந்தார்கள். அவர்களுள்ளே எனது

**மு. கணபதிப்பிள்ளை**

மனதைக் கவர்ந்து ஈடுபாடு காட்டி, குறைநிறைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டி என்னை நெறிப்படுத்தி எனது மொழிக்கொள்கைக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

---

# "யாழ்குடாநாட்டை படையினரால் ஒருபோதும் மீட்க முடியாது"

"யாழ். குடா நாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. இதே வேளை தற்போதைய இனப்பிரச்னை தீர்வுக்கான ஆலோசனைகள் தொடர்ந்து தோல்வியடையும் பட்சத்தில் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடையும் இதனால் கூடிய இரத்தம் சிந்தும் நிலை உருவாகுமே தவிர, யாழ். குடா நாட்டை படையினரால் ஒருபோதும் மீட்கமுடியாது."

இவ்வாறு, விடுதலைப்புலிகளின் பேச்சாளர் திரு. பாலசிங்கம் 'தவீக்' என்னும் ஆங்கில சஞ்சிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அந்த சஞ்சிகையில் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து ஆராயப்பட்டுள்ள அதன் சாரம் வருமாறு:

தமிழ் போராளிகளின் முழுமையான ஆயுதபலத்தை இலங்கை அரசாங்கம் தற்போதே உணரத் தொடங்கியுள்ளது. தமிழ்ப் போராளிகள் தன்னியக்க தொழில் நுட்ப சாதனங்களுடன் தமிழ்நாடு கரையிலிருந்து கொண்டு தாக்குதல்களை மேற்கொள்ளும் அளவுக்கு சக்தி படைத்தவர்களாகவுள்ளார்கள்! இந்த நிலையை அடைவார்கள் என்பதை இலங்கை இராணுவம் எண்ணிக்கூடப் பார்த்திருக்கமுடியாது.

அத்துடன் இலங்கைப் போராளிகளிடம் ஆயுதபலம் அனைத்தும் இருந்தபோதும் அவர்கள் மத்தியில் ஒரு மனக் குழப்பத்தை இந்திய அதிகாரிகளின் போக்கு உருவாக்கியுள்ளது அதற்கு ஒரு காரணமாக இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கையிலுள்ள மாற்றத்தையும் சுட்டிக் காட்டலாம்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி பதவிக்கு வந்த பின்னர், இந்திய அரசு தனது அந்நிய நாடுகளுடனான வெளிவிவகார கொள்கையைத் தெளிவுபட எடுத்துரைத்துள்ளது அதாவது எந்தவொரு அந்நிய நாட்டுடனும் தான் மோதல் எதுவுக்கும் தயாரில்லை என்பதே அது.

மேலும் தனி ஈழ ராச்சியம் ஒன்று உருவாவதற்கு இந்தியா உடந்தையாக இருக்காது என்றும் இந்தியதரப்பில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது

ஆனால் சகல போராளிகள் தரப்பிலும் தமிழ் மக்களுக்கே தனிநாடு ஒன்று வேண்டுமென்பதே அவர்களது அடிப்படைக் கோரிக்கையாகவுள்ளது.

தற்போது இந்தியாவை நோக்கி குறைந்தளவு அகதிகளே இடம் பெயர்ந்து வருகிறார்கள், ஆனால் அதிகப்படியான போராளிகள் தமது படைக்கலங்களுடன் இலங்கையை நோக்கிச் சென்றவண்ணமுள்ளனர். அண்மையில் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து 150 புலிப்போராளிகள் இலங்கைக்குத் திரும்பிவிட்டனர், ஒருசில நிமிடங்களில் போராளிகள் குழுத் தலைவர்கள் தமிழ்நாட்டிலிருந்து கூட வெளியேறத் தயாராகவேயுள்ளார்கள்.

தமிழ் நாட்டைவிட்டு வெளியேற நேர்ந்தால் இவர்களின்

### தொகுப்பு: 'பிரபா'

அடுத்த நடவடிக்கை எதுவாக இருக்கும் என்பது புதிராகவேயுள்ளது இதேவேளை இந்திய அரசு தம்மீது மிகுந்த கண்காணிப்புடன் உள்ளது என்பதில் அவர்களுக்கு ஒருவித அச்சம் இல்லாமலில்லை,

#### ஆயுத உற்பத்தி

போராளிகளுக்கு உலகின் பலபகுதிகளிலிருந்தும் ஆயுதங்கள் கிடைத்து வருகின்றன. மேலும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்கனவே யாழ்ப்பாணப்பகுதியில் ஆயுத உற்பத்தி கூடங்களை உருவாக்கியுள்ளது

போராளிகளைப் பொறுத்த மட்டில் அவர்களின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு பாரிய போர்தளபாடங்கள் தேவைப்படுவதாய் இல்லை காரணம் யாழ்ப்பாணத்தில் போராளிகள் நேரடித் தாக்குதல்களிலேயே ஈடுபட்டுவருகிறார்கள்,

இந்தியாவின் மத்தியஸ்தத்திலும்பேராளிகள் நம்பிக்கை கொள்ளவில்லை குறைந்த அளவிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அங்கத்தவர்கள் இருப்பினும் தமிழீழத்தை அமைக்க முடியும் என்பதில் அவர்களிடம் நம்பிக்கையுண்டு அவர்களின் எண்ணிக்கை ஆயுதபலம் என்பன இரகசியமாக இருப்பினும்சுமார் 3000—5000 வரையில அங்கத்தவர்கள் உள்ளனர் எனஅறியப்படுகிறது.

1986ம் ஆண்டுமனிதஉரிமைகள் ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின்படி இலங்கைப்போராளிகள் குழுக்களில்சுமார் ஆறு யிரம் தீவிரபயிற்சி பெற்ற போராளிகள் உள்ளனர்.

போராளிகள் தமக்கான ஆயுதங்கள் எவ்வளவுக்கு தேவையான பணத்தை பொதுமக்களிடமே பெற்றுவருகின்றனர். யாழ்ப்பாண சிவில்நிர்வாகம் கூட அவர்களின் கட்டுப்பாட்டிலேயேயுள்ளது.

அண்மையில் தமிழ்நாடு பொலிசார், 'போராளிகுழுக்களது ஆயுதங்களை கைப்பற்றி வீட்டுக்காவலில் வைத்துள்ளனர்' என்ற செய்தி வெளியானதைத் தொடர்ந்து சுமார் இரண்டு கோடி ருபா பொதுமக்களால் சேகரிக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

போராளிகள் குழுக்கள் பெருந்தொகையிலான பணத்தினை மதுரையிலுள்ள வங்கிகளில் வைப்பிலிட்டுள்ளார்கள். 'எந்நேரமும் எம்மால் சில கோடியோ பணம் மீட்டு எடுக்கப்படும்' என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இலங்கை இந்த வகையிலான இனப் பிரச்னையைத் தீர்க்கும் பொருட்டு கொண்டுவந்த ஆலோசனைகள் மற்றும் மாற்றுத் திட்டங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் நிராகரித்தே வந்துள்ளது. ஒரு கட்டத்தில் 'தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கென இது வரையில் ஒரு சிறு மாற்றுத் திட்டமேனும் முன்வைக்கப் படவில்லை' யென்றும் திருமலை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு ஆர் சம்பந்தன் கூறியுள்ளார்

அத்துடன் அவர் மேலும் 'வடக்கும் கிழக்கும் பிரிக்கப் படுமென்ற பேச்சுக்கே இடமில்லை. அவை பாரம்பரிய தமிழர் பிரதேசங்கள், இதுவரைகாலமும் திருமலை மாவட்டத்திலிருந்து தமிழ் எம், பீக்களை தெரிவானார்கள் 1977ம் ஆண்டு சிங்களவர் ஒருவர் தெரிவானார் அதுவும் சேருவில சிங்களக் குடியேற்றத்தால்' என்று கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் 70 சத விகிதமானவர்களும் தமிழர்களே. அத்துடன் தமிழ் பேசும் முஸ்லீம் மக்களில் 60 வீதமானவர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே வாழ்கின்றனர்'

பிரச்னைக்குத் தீர்வுகாண

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான ஒரு உடன்பாட்டின் மூலமே முடியுமென்று பலராலும் இன்று உணரப்பட்டு வருகின்றது

இதன் அடிப்படையிலேயே யாழ் குடாநாட்டுக்கான முதலமைச்சர் நியமனம் திரு. பிரபாகரனுக்கு வழங்கலாம் என்ற கருத்தும் நிலவியது.

இந்தப் பேச்சு வார்த்தைகளே பங்களூரில் நடைபெற்ற சார்க் மாநாட்டைத் தொடர்ந்து ஆராயப்பட்டவையும் பின்னர் திரு. பிரபாகரனால் நிராகரிக்கப்பட்டவையுமாகும். இப் பேச்சுக்களின் முறிவே போராளிகள் குழுக்களின் தொடர்பு சாதனங்கள் தமிழ்நாடு பொலிசாரினால் பறிமுதல் செய்யப்பட்டதும் பின்னர் திரு பிரபாகரனின் உண்ணாவிரதப் போராட்டத்தை அடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனினால் மீண்டும் கையளிக்கப்பட்டதுமாகும்.

## இந்திய போக்கில் மாற்றம்

இனப்பிரச்னை தீர்வுக்கு இலங்கை அரசுக்கும் போராளிகளுக்கும் இடையேயுள்ள கருத்து முரண்பாடுகளை போக்கி ஒரு இணக்கத்தை ஏற்படுத்துவதே இந்திய மத்திய அரசின் நோக்கமாகவுள்ளது. ஆனால் இந்தியா தனது போக்கை படிப்படியாக மாற்றிக்கொண்டு வருகின்றது என்றே போராளிகள் குழுத் தலைவர்கள் கருதுகிறார்கள்.

சோஷலிச அரசினால் மட்டுமே இலங்கை இனப்பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்பது இன்று போராளிகள் குழுத் தலைவர்களின் கருத்தாகவுள்ளது.

ஆனால் இந்தியாவின் உதவி எதுவுமின்றி தனித்துவமாக இயங்கும் வகையில் நீண்டகாலத் திட்டமொன்றைத் தீட்டுவதில் அனைவரும் முனிந்தது மறுக்க முடியாத உண்மையாகும்.


## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வேப்பம் பலகைகள் பல sizeல் விற்பனைக்குண்டு, சாமி மர அரிவு ஆலை, 91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம் [C 274]

### சேவை

டாக்டர், இஞ்சினியர், பட்டதாரிகள் மற்றும் ஏனையோரும் திருமணம் நிச்சயிக்க உடன் தொடர்பு கொள்ளவும்: பிரபல ரேகை எண் சோதிட நிபுணர் செ நாகேந்திரராசா. 174/16 கோவில் வீதி. [கைலாச பிள்ளையார் கோவிலடி] நல்லூர்.

[C 6305]

லிடோ

10-30, 2-30, 4-30, 6-30

BOLERO

(Strictly for Adults and Colour)

வெலிங்டன் திரையில்

10-30 2-30 6-30

M G R. -ஜெயலலிதா, அசோகன், மனோகர், சோ, சௌகார்ஜானகி

நடித்த

ஒளிவிளக்கு

12 முதல்

TOO HOT TO HANDLE

(Adults only)


## இன்று

யாழ்ப்பாணம், வியா. சங்கீத வித்துவான் ஏ. கே. கருணாகரனின் கர்நாடக இசைக் கச்சேரி இன்று வியாழக்கிழமை மாலை 6-55க்கு ரூபவாஹினி கலையரங்கத்தில ஒளிபரப்பப்படவுள்ளது. [மா]


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அருணாசலம் கோபாலசாமி

(யாழ். பெரியகடை மார்க்கட் ஐக்கிய நாணய சங்க தலைவர்)

தோற்றம்: 16-12-1909

மறைவு: 22-12-1985

திதி: 11 12-1986

ஓராண்டு உருண்டது ஐயா நீர் ஓய்ந்து நீரார்ந்த விழிகளோ ஓயவில்லை மாய்ந்த தங்கள் பிரிவால் துயருறும்,

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

81-A, செம்பணை வீதி யாழ்ப்பாணம்.

C 6311

## 6-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னப்பு சுப்பிரமணியம்

(கல்லூரி அதிபர், வேரப்பிட்டி, சங்கானை, கோண்டாவில், நத்தோட்டை, பலாலி)

மலர்வு: 1922-12-03

உதிர்வு: 1980-12-11

அன்பாலும் பண்பாலும் எம் குடும்பத்துக்கும், மாணவர்கட்கும், ஒளியூட்டிய அன்புத் தெய்வமே. ஆண்டுகள் ஆறென்ன அறுபதுதானாலும் உயிருள்ளவரை உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

பிரபை மஹால் உரும்பராய். C 6318


## உள்ளூராட்சி மட்டத்திலான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாலும் நான் எதிர்க்கவில்லை ஆனால் அந்த சிறுபான்மை இனத்தவரே இந்த பதவியை தொடர்ந்தும் வகித்துவர வேண்டும் அதற்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு வழங்குவோம்

ஆனல் மாகாணசபை ஆட்சி முறையை நாம் எதிர்க்கிறோம் மாகாணசபைத் தேர்தலில் எமது கட்சி பங்கு பற்றுவது குறித்து நாம் இன்னும் முடிவெடுக்கவில்லை அதைத் தேர்தல்களை பகிஷ்கரிக்கக்கூடாதென்பதே எனது தனிப்பட்ட கருத்து தேர்தல் ஜனநாயக முறை எமது கட்சி ஜனநாயகக்கட்சி சாத்வீக ரீதியில் நாம் தேர்தலில் கலந்துகொள்வோம்.

சமஷ்டி ஆட்சி முறை இந்தியாவிலும் உள்ளது. அதை இந்தியா பிரியவில்லை. ஏனெனில் 'ஜெய்ஹிந்த்' என்றவேதவாக்கு ஒவ்வொரு இந்தியன் உள்ளத்திலும் ஆழமாக வேரூன்றியுள்ளது பிரிவு ஏற்பட்டால் இணையமுடியாது அப்படி இணைவதும் அபூர்வம்.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தது பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்தது. வியட்நாம் இரண்டாக பிரிந்தாலும் குண்டுகளை போட்டு பேரழிவுகளை ஏற்படுத்திய பின்பே அது இணைந்தது அதனால் எந்த வகையிலும் பிரிவினைக்கு வழியேற்படுத்திக்கொடுக்க கூடாது.

சிறுபான்மையினர் எங்கிருந்தாலும் அவர்களிற்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்பதே எமது இலட்சியம்.

முன்னைய தேர்தல் முறையின் கீழ் சிறுபான்மையினர் பயனடைந்தனர். ஆனல் புதிய விகிதாசார [தேர்தல் முறை சிறுபான்மையினரின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்து விடுகிறது. (கூ-ஓ)

## ஒரு தலைமையின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

எமது தீவிர போராட்டம் கடந்த ஜூன் மாதம் 4-ம் திகதி ஆரம்பித்து ஒருமாத காலத்திற்குள்ளேயே இராணுவத்தை முகாமிற்குள் நிலைகொள்ளச் செய்து கிளிநொச்சி மாவட்டத்தையே எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தோம்'' என்றும் தெரிவித்தார்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பொது நிறுவனங்களின் 435 பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம் மாநாட்டின் இறுதியில் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை ஏற்றுக்கொள்வதெனவும் வேறு இயக்கங்கள் இங்கு வந்து வரி வசூலிப்பதையோ, இங்குள்ள நிர்வாகப் பிரச்னைகளில் தலையிடுவதையோ தாம் ஏற்றுக்கொள்ள மாட்டோமென இந்நிறுவனங்கள் தீர்மானமொன்றை நிறைவேற்றியது.

அத்தியாவசிய சேவைகள் குழு, பிரஜைகள் குழு, கிராம அபிவிருத்தி ஒன்றியம், மாதர் அபிவிருத்தி சபை ஒன்றியம் இணக்கசபை ஒன்றியம், மினி சினிமா ஒன்றியம், ஆரம்ப சுகாதாரக் குழுக்கள், வர்த்தக சங்கம், விவசாய சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், மினிபஸ் உரிமையாளர் சங்கம், தெ. ப. பொ. உ வி. கூ. சங்கம், தெ. பொ. ந சங்கம், விழிப்புக் குழுக்கள், விளையாட்டுக் கழகம், நீர்ப்பாசன தொழிலாளர் சங்கம், பாதிக்கப்பட்ட பெண்கள் நலன்புரிச் சங்கம் போன்ற பல அமைப்புகள் கலந்து கொண்டன. [ஓ]

## தினமும் தாக்குதல்

சுன்னாகம் புதன்

பலாலி இராணுவ முகாமிலிருந்து பொதுமக்கள் வாழும் பகுதியை நோக்கி குண்டுத் தாக்குதல் நடத்துவதும் 'ஷெல்' தாக்குதல் நடத்துவதும் வழமையான சம்பவமாகி விட்டது

## தமிழ்நாட்டில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளதாய் உள்துறை செயலாளர் திரு. ரி வி. வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

தமிழும் அரச ஆட்சிமொழிகளில் ஒன்றாக இடம்பெறும் வகையில் அரசியல் சாசனம் மாற்றம் செய்யப்படவேண்டுமென்ற தி.மு.க. வின் கோரிக்கையின் பேரிலேயே மேற்படி ஹிந்தி சட்ட நகல் எரிப்பும் அதனைத் தொடர்ந்து இச்சட்டத்திற்கான எதிர்நடவடிக்கைகளும் மாநிலம் தழுவிய அளவில் பெருமளவு இடம் பெற்று வருகின்றன.

இதனையடுத்தே மேற்படி மாநில பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (சி)

## கட்புலன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லில், பெருந்தொகையான மக்கள் முன்னிலையில் நேற்று இச்சீட்டிழுப்பு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது.

அடுத்த மாதாந்த சீட்டிழுப்பு நத்தார்- தைப் பொங்கலை முன்னிட்டு ஜனவரி 15ம் திகதி சுன்னாகத்தில் நடைபெறவுள்ளது

நேற்றைய சீட்டிழுப்பில் பரிசுபெற்றோர் யாழ் ஸ்ரான்லி வீதியில் சிறீதர் சினிமாவுக்கு அருகாமையிலுள்ள தமிழ் ஈழ ராணுவ தலைமைச்செயலகத்துக்குச் சென்று பரிசிலைப்பெற்றுக்கொள்ளலமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (மா


## எமது புதிய வெளியீடுகள்

(1) ★ சந்திரசேகர் ★ அஸ்வினி ✶ செந்தில்

''மாட்டுக்கார மன்னாரு''

(R. V. V. MASTER)

(2) ★ சத்தியராஜ் ✶ சுமன் ★ மாதவி

''மர்ம மனிதன்'' (PYRAMID MASTER)

(3) ✶ விஷ்ணுவர்த்தன் ✶ சந்திரகலா

''அலைகள்'' (PYRAMID MASTER)

(4) சிங்கப்பூரில் நடைபெற்ற

இளையராஜாவின் கச்சேரி

(PYRAMID MASTER)

குணம் வீடியோ சென்ரர்,

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665

[A-3241]


## இனமோதலுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களிலும், ஈடுபாடு கொண்டுள்ளனர் இவ்வாறு லக்ஷ்மன் ஜயக்கொடி கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது; இஸ்ரேல், அரசாங்கத்திற்கு மாத்திரமல்லாமல் தமிழ் தீவிரவாத இளைஞர்களிற்கும் உதவி வழங்குவதாக நாம் சந்தேகிக்கின்றோம் ஏனெனில் அவர் எது போக்கு அப்படியானது

சிங்களவர்களிற்கும், தமிழர்களிற்குமிடையில், முஸ்லீம்களிற்கும் தமிழர்களிற்குமிடையில் மோதல்கள் ஏற்படுத்த இஸ்ரேல் ஒரு சக்தியாக இயங்கி வருகிறது நாம் அவர்களுக்கு கைப் பொம்மைகளாகி விடக்கூடாது அப்படி நடந்தால் எமது நாடு ஒரு பாலஸ்தீனமாகி விடும்.

## சீட்டிழுப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டுகளின் இலக்கங்கள் பின்வருமாறு:

1-வது பரிசு:
Y 202877 — ரூபா 50 000

2-வது பரிசு:
J 202976 — ரூபா 25.000

3-வது பரிசு:
J 201400 — ரூபா 15.000

4-வது பரிசு:
V 201586 — ரூபா 7,500

ஆறுதல் பரிசில்கள்:
(கீரோ சைக்கிள்)

| | |
|---|---|
| Q 200330 | Y 202035 |
| J 201797 | F 201620 |
| L 200875 | W 202710 |
| F 202932 | U 203672 |
| N 202217 | L 20 187 |
| X 202289 | K 203858 |
| R 200700 | N 203498 |
| W 202759 | X 202752 |
| R 203039 | F 202160 |
| F 202691 | H 203540 |
| G 201132 | T 202844 |
| E 203297 | R 201543 |
| V 202002 | M 200829 |
| Q 202159 | D 200952 |
| J 200652 | X 201237 |
| V 203562 | V 202321 |

(மா)

## வழித்தடை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்துகொண்டோம். இது தொடர்பாக விடுதலைப் புலிகளோடு நாம் தொடர்பு கொண்டபொழுது இவர்களுக்குத் தாம் பொறுப்பில்லையெனவும் பெற்றோருடன் பேசிக்கொள்ளுமாறும் கூறினர்கள்.

இவர்களை விடுவிப்பது தொடர்பாக நேற்றுக்காலையில் எம்முடன் தொடர்புகொண்ட உறவினர்களுக்கு மாலையில் இவர்களை விடுவதாக உறுதியளித்திருந்தோம். இதற்கிடையில் நண்பகல்முதல் கைதடி, கோண்டாவில் பலாலி வீதியையொட்டிய பிரதான பாதைகள் வழித்தடை செய்யப்பட்டிருந்தது

இந்த வழித்தடைக்கும் கைதுசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது அவ்வூர் மக்களுக்கோ தொடர்புஇல்லையென்பதை தெரிந்து கொண்டோம்.

தவறான வழியில் நடத்தப்பட்ட இவ்விருவரையும் எச்சரிக்கை செய்து அவர்களின் உறவினரிடம் நேற்றிரவு ஒப்படைத்துள்ளோம்.

தமது ஸ்தாபனத்தின் உறுப்பினரையும் ஆதரவாளரையும் தவறான செயலுக்கு தூண்டிவிட்டு அவர்கள் அகப்பட்டுக் கொண்டதுடன் அவர்களுக்கும் தமக்கும் தொடர்புஇல்லையென புலிகள் தெரிவித்து விட்டமை வேதனையைத் தருகிறது.

குறுக்குவழி கையாண்டு சுன்னாகம் இளம் விவசாயிகள் சங்கம், அராலியூர்த்தம்பி, பொதுமக்கள் என முகமூடி கொள்வது கருத்துப் பலமற்ற கோழைத்தனமாகும்.

## இன்றைய பலன்

மாதம்: கார்த்திகை
திகதி: 25 (11-12 86)
கிழமை: வியாழன்
நட்சத்திரம்: ரேவதி
திதி: தசமி மேல் ஏகாதசி

மேடம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள் தன்மான வாய்ப்பும் கிட்டும். தன்தொழில் சிறப்புண்டாம்

இடபம்: தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும் எதிலும் அடக்கம் விரும்பத்தக்கது

மிதுனம்: வாழ்க்கையில் புதிரான நிலைமை தென்படும். விவசாயிகள் நன்மையடைவர். கடமையிலும் ஆதரவுண்டு.

கடகம்: வணிகத்துறையில் புதிய தொடர்பு பெருகும் எடுத்த காரியத்தை சாதிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள் குடும்ப மேம்பாடுமுண்டு.

சிங்கம்: பாதையில் பழுதுண்டு பகைவர்கள் காத்திருப்பர், தொழில் நஷ்டமுமுண்டாம்.

கன்னி: வெல்லம்போல் இனிக்கும் வாழ்க்கை இருப்பிட மாற்றமும் உண்டு. இரு தொழில் பிரியமுண்டு. சுமாரான தினம்.

துலாம்: நினைவின் நிலைலாட்டம் நிம்மதியைக் குலைக்கும். உறவினர்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும். வீண் செலவும் ஏற்படும்.

விருச்சிகம்: அன்னியர் மூலம் ஆதரவு பெருகும் அரசியலிலும் ஆர்வம் பிறக்கும். தொழில் மகிழ்ச்சியுமுண்டு.

தனுசு: வாழ்க்கையில் வசதிகள் பெருகும் இரகசியத்தையும் மேலிடும். இரு தொழில் முயற்சிக்கு வழி கோலப்படலாம்.

மகரம்: மேலதிகாரிகளின் ஆதரவு பெருகும் எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம்.

கும்பம்: அரசபயத்திற்கு இடமுண்டு. மின்னியல் பொறியியல் பகுதியில் கடமையாற்றுவோர். அவதானம் வேண்டும். நிதானப் புத்தியுடன் நடந்து கொள்ளவும்.

மீனம்: கண்களில் கனல் தெறிக்கும். புகழும் குன்றிடும். எதிலும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை விரும்பத்தக்கது.

திருமலை
வே. ரவீந்திரன்

## அறிவித்தல்

யாழ் லயன்ஸ் கழகத்தின் அதிர்ஸ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் 18-01-1987க்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது இச்சீட்டிழுப்பு 14-12.86ல் நடைபெறுவதாயிருந்தது குறிப்பிடத்தக்கது.

தலைவர், யாழ் லயன்ஸ் கழகம்.
[A3314]

## வீடும் வளவும் விற்பனைக்கு

சுண்டுக்குளிக்கு அண்மையில் மூன்று பரப்புக் காணியுடன் சகலவசதிகள் உள்ள வீடுவிற்பனைக்குண்டு.

மங்களா ஏஜென்சி
கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். [A3315]

## பாதுகாப்புச் சங்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியர இலங்கை மருத்துவ மூலிகைகள் பாதுகாப்புச் சங்க விஷேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 13ம் திகதி காலை தெல்லிப்பழை பல நோக்குச் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து மூலிகைகளை இனங்காணல், உபயோகித்தல் வளர்த்தல் குறித்த கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது.

## வீடமைப்புக்கடன் படிவம்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை நகர சபை எல்லைப் பிரிவுகளுக்கான 1987ம் ஆண்டுக்கான வீடமைப்புக்கடன் வழங்கும் படிவம் வல்வை நகரசபை அலுவலகத்திலும் சம்பந்தப்பட்ட பகுதி சனசமூக நிலையங்களிலும் வழங்கப்படவுள்ளது.

கடன் பெறவிரும்புபவர்கள் இப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து எதிர்வரும் 22ந் திகதிக்குமுன்னதாக வல்வை நகரசபைக் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்கப்படுகின்றனர். (எ)

## மாணவர், மாதர் அணி

பண்டத்தரிப்பு, புதன்

வட்டுக்கோட்டை தொகுதியில் கிராமசேவை அலுவலர் பிரிவு ரீதியாக இயங்கி வரும் விழிப்புக் குழுக்கள் மாதர் அணி, மாணவர் அணி ஆகியவற்றை தத்தம் பகுதிகளில் அமைத்து வருகின்றனர்.

## மாதிரிக் கிராம வேலைகள் தொடர அனுமதி

ஊர்காவற்றுறை, புதன்

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட சின்னமடு மாதிரிக் கிராம வேலைகள் நாட்டிலுள்ள தற்போதைய சூழ்நிலைகளால் இடை நடுவில் நிறுத்திவைக்கப்

(7-ம் பக்கம் பார்க்க)

## விண்ணக வாழ்வின் 1-வது ஆண்டு நினைவஞ்சலி



வைத்திலிங்கம்
பொன்னுச்சாமி
மலர்வு: 20-3-1903
உதிர்வு: 22-11-198

நீங்கள் எங்களை விட்டு அகன்றாலும் உங்கள்நினைவு எங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை தினமும் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
457, கே. கே. எஸ் ரோட்,
கோண்டாவில்.
(C 6276)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
கீதா சுந்தரகுமார்
(பபா)
தோற்றம்- 23-06-1954
மறைவு: 03-12-1984
திதி:- 11-12-1986

அன்பாலும், பண்பாலும், இனிய புன்னகையாலும் இதயத்தில் நிறைந்த எங்கள் அன்புத் தெய்வமே எம்மை விட்டுப்பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டகலா. உங்கள் பிரிவால் வாடும்:

கணவன், அப்பா, அம்மா, மாமா, மாமி, சகோதரி, சகோதரர்கள், மைத்துனர் குடும்பத்தினர், உற்றார், உறவினர்.

பெருந்தெரு,
புலோலி தெற்கு,
புலோலி. (C 6283)

## றெபின் சோப் பரிசுப் போட்டி

பெனின்சுலா குறூப்பின் தரமான தயாரிப்பு!

கொழுப்புக் கலப்பற்ற சுத்தமான எண்ணெயில் மேல்நாட்டு யந்திர முறைப்படி தயாரித்த றெபின் சோப்வகைகளைப் பாவியுங்கள்!

ரூபா 11/75
Retail Price:




சிக்கனத்திற்கும் தூய வெண்மைச் சலவைக்கும் றெபின் சோப் வகைகளை உபயோகியுங்கள்.




ஒருமுறை பாவித்தால் மீண்டும் நாடுவீர்.
தொழிலகம் AND காரியாலயம்
9, கண்டி வீதி,
நாவற்குழி.

### பங்குபற்றும் முறை:

10 றெபின் பார்சோப் மேலுறைகளையோ அல்லது 20 றெபின் அரைபார் சோப் மேலுறைகளையோ அல்லது 50 றெபின் வெள்ளை சோப் மேலுறைகளையோ அல்லது 50 றெபின் நீல சோப் மேலுறைகளையோ சேகரித்து அவற்றுடன் ஒரு 5'' × 2½'' வெள்ளை கடதாசியில் உங்கள் முழுப்பெயர், விலாசம் ஆகியவற்றையும் மறுபக்கத்தில் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம்ஆகியவற்றையும்எழுதி அனுப்பவும்.

### பாவனையாளர் பரிசுகள்:

1ம் பரிசு - நெசனல் 2 in one Set.
2ம் பரிசு - நெசனல் றேடியோ
3ம் பரிசு - சுவர்க்கடிகாரம்

மேலும் 10 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

### வியாபாரிகள் பரிசுகள்:

முதல் 3 பரிசுகளையும் பெறும் பாவனையாளர்கள் சவர்க்காரம் வாங்கிய கடைகளுக்கு

1ம் பரிசு - சுவர்சடிகாரம்
2ம் பரிசு - Air Pot Cooling
3ம் பரிசு - Thermos சுடுதண்ணீர் போத்தல்

### போட்டி முடிவு திகதி
### 1987 தைமாதம் 5-ம் திகதி

பரிசு இழுப்பு 1987 ஜனவரி 14-ம் திகதி காலை 9 மணிக்கும் 10 மணிக்குமிடையில் நடைபெறும்.

அனுப்பவேண்டிய முகவரி:

## த பெனின்சுலா குருப்

இல. 9, கண்டி வீதி, நாவற்குளி.

(பெனின்சுலா சவர்க்கார தொழிலகத்தின் ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.)
[A 3209]

## திருடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், விபஈ. கிளிநொச்சி காந்திசேவா சங்கத்தில் சவர்க்காரம், பற்பொடி போன்ற பொருள்கள் தயாரிக்கும் இயந்திர சாதனங்களை அபகரித்துச்சென்ற ஒரு கோஷ்டியினரிடமிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் மீட்டெடுத்து மீண்டும் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காந்திசேவா சங்கம் மேற்படி பொருட்களை விற்று அதிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்திலிருந்தே அனாதை இல்லம் நடத்திவருவதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவிக்கின்றனர். [மா]


## கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முல்லைத்தீவு

பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன

(1) வங்கிச்சேவை முகாமையாளர்- 111/10

வயது:- 23 தொடக்கம் 40 வயதுவரை

வேதனம்: 350 — 6.5 / 15/7 - 20/8 | இத்துடன் கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்படும் படிகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை:

[அ] கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கி முகாமையாளர் பதவியில் 02 வருடத்திற்குக்குறையாத அனுபவம்

அல்லது

[ஆ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் [உயர்தரம்]. க.பொ.த [உயர்தரம்] 3 பாடங்களில் சித்தியும் சம்பந்தப்பட்ட துறையிலான இலிகிதர் பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

(2) காசாளர் 306/14

வயது: 20 — 35வரை

வேதனம்: 195 - 345 / 10/10 - 12.50/4 | இத்துடன் கூட்டுறவு ஊழியர்கட்கு வழங்கப்படும் படிகளும் வழங்கப்படும.

கல்வித் தகைமை

[அ] கூட்டுறவுப் பணியாளரின் 15வது சம்பளத்திட்டத்தில் விற்பனைப் பிரதிநிதி பதவியில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[ஆ] கூட்டுறவுப் பணியாளர் [சாதாரண தரப்] பத்திரம் / க.பொ.த. [சாதாரண தரத்தில்] பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூய எண்கணிதம் சிங்களம் / தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களிலான சித்தி.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 24-12-1986, புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் பொதுமுகாமையாளர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

பதில் பொதுமுகாமையாளர்
(திரு. சோ. செ. அனந்தராசா)

[A 3305]


## சிரமதானம்

கிளிநொச்சி, புதன் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் கிளிநொச்சி டிப்போவில் பழுதடைந்த பஸ்கள் திருத்தி அமைக்கும் சிரமதானப்பணி அண்மையில் டிப்போ அத்தியட்சகர் தந்தையா தலைமையில் நடைபெற்றது.

## விசேஷ உணவு முத்திரை

நெடுந்தீவு, புதன் கடல் வலயச் சட்டத்தால் பாதிப்புற்ற கடற்றொழிலாளருக்கான 5வது சுற்று விசேஷ உணவு முத்திரை யாழ் மாவட்டம் எங்கும் வழங்கப்பட்டுள்ளது

இவ்வுணவு முத்திரை அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது

அக்டோபர், நவம்பர், மாதங்களுக்கான உணவுமுத்திரை டிசம்பர் இறுதியிலும் டிசம்பர் மாதத்திற்கான முத்திரை ஜனவரி மாதம் முடியும் வரையிலும் செல்லுபடியாகும் என்று அறிவிக்கப்படுகிறது. [எ]

## மாதிரிக்கிராமம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

நிறுத்திவைக்கப்பட்ட இவ்வேலைகளைத் தொடர்ந்து செய்யுமாறு மாதிரிக்கிராம வீடமைப்பு அபிவிருத்திச் சங்கத்திடம் வீடமைப்பு அதிகார சபை கேட்டுள்ளது அதன்பிரகாரம் அரைகுறையாகவிருக்கும் 35 வீடுகளுக்குரிய பணமும், ஆரம்ப நிலையிலிருக்கும் 55 வீடுகளுக்குரிய பணமும் பின்னர் வழங்கப்படுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள். [சி]

## அவர்களை என்னால் மறக்க

[4-ம் பக்கத் தொடர்ச்சி

என்றும் ஆதரவு அளித்து வந்தவர் ஒருவர். அவர்தான் ஒன்பது வருடங்களுக்கு முன்பு எம்மைவிட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த அமரர் பேரின்பநாயகம் அவர்கள் அமரர் பேரின்பநாயகம் அவர்களுடன் மேற்பார்வையாளர்களாகப் பணியாற்றியவர்களுள்ளே இருவர் ஏலவே இறைவனடி சேர்ந்து விட்டார்கள் ஒருவர் அரசாங்க சபையில தலைமை எழுதுவினைஞராக இருந்து புகழ்பூட்டிய பெரியதம்பி அவர்கள் மற்றையவர் யாழ்ப்பாணத்துச் சைவாசிரிய அதிராக விளங்கிய சுவாமிநாதன் அவர்கள். இவர்கள் மூவரும் வார இறுதியில் கொழும்பில் அமைந்திருந்த எனது சிறு குடிலுக்கு வந்து கொண்டாடி விருந்துண்டு என்னை மகிழ்விப்பார்கள். எனது நூலகத்தே வரிசைப்படுத்தி அடுக்கி வைத்த பழைய-புதிய நூல்களையெல்லாம் பார்வையிடுவார்கள் "மொழிபெயர்ப்பு விசித்திரங்கள்" பற்றியும் நகைச்சுவை ததும்ப எடுத்தோதி என்னை வழிப்படுத்துவார்கள். அவர்களை யான் மறக்கமுடிவதில்லை முன்போய் விட்டார்கள் போக இவர் இருக்கிறார் என்று இருந்தேன். அவரும் போக என் தனிமையை எடுத்துக்கூற முடியாது.

தமிழ்மொழியே யன்றிப் பிறமொழி பயின்று கொள்ளாதாரும், ஆங்கில மொழியேயன்றித் தமிழ்மொழி பயின்றுகொள்ளாதாரும் அயல்மொழியைத் தாய்மொழியாகக்கொண்டாரும். தமிழ் மொழி பெயர்ப்பினை மேற்கொள்ளவும் செல்லாக்கம் செய்யவும் தொடங்கிய காலம் அது ஆங்கிலத்தை ஆழப்பயிலாமல் தமிழ் மட்டும் ஓரளவுக்குப் பயின்றுகொண்டோர் பதவிகளில் அமர்த்தப்பட்டமையால் "அலங்கோலச் சொல்லாக்கம்" நிகழ்ந்துகொண்டிருந்த வேளையிலேதான் இவருடைய தொடர்புமிகுதியாகக் கிடைத்தது.

அமரர் பேரின்பநாயகம் அவர்கள் பிறந்த ஊர் மானிப்பாய். அந்த ஊரிலேதான் மொழி நூல் ஆராய்ச்சியாளரான வண பிதா ஞானப்பிரகாசரும் தோன்றினார்கள் அந்த ஊர் வரலாற்றிலேயே தனிப்புகழ்பெற்றது வீரமாமுனிவர் 'சதுரகராதி' யிலும் பார்க்க நான்குமடங்கு சொற்களைக் கொண்டதாய் [58,500 சொற்களையுடையதாய்] முதன் முதலாகயாழ்ப்பாணத்தில் உண்டாக்கப்பட்ட 'பேரகராதி' இந்தப் பெருமைமிக்க ஊரில்தான் அச்சிடப்பட்டது 1842ம் ஆண்டிலே "மானிப்பாய் அமெரிக்கன் மிசியோன் அச்சுக்கூடத்தில்" அச்சேறிய அகராதிதான் நான்குறிப்பிடுவது! இதனை மானிப்பாய் அகராதி என்றும் கூறுவதுண்டு! அமெரிக்கரான கிறீன் வைத்தியர் ஆங்கில வைத்தியத்தினைத் தொடங்கியதும், விஞ்ஞான மொழிபெயர்ப்புகட்கு அத்திவாரமிட்டு அரும்பணி புரிந்ததும் இந்த ஊரிலேதன்! அந்த மண்வளந்தினைத் திரு பேரின்பநாயகம் அவர்களிடத்திலே கண்டேன் அவர்கள் தமது கிராமத்தினை நோக்காமல்—கண்பேண்வைத்து—புரிந்த அரும்பணியாலே தான் இன்று மொழிபெயர்ப்புச் சிறப்படைந்திருக்கின்றது "திணைக்களம்" என்ற சொல்லினையான் முதல்முதலாக எடுத்தாண்டபோது அதற்கு ஆதரவு அளித்தவர் அவர். "இலாகா, பகுதி, துறை" என அலங்கோலமாகக்காணப்பட்ட சொற்களெல்லாம் அன்றதும், அவரது துணையினாலேதான்! "குடியேற்ற வெளியேற்ற இலாகா" என வழுவுற்றுக்கிடந்தவற்றுக்கு "குடியகல்வுக் குடியவ்வுத் திணைக்களம்" எனமலர்ந்ததும் அவர் என் குளித்த ஆதரவினாலேதான்! இப்படியாக அவர்கள் மொழித்துறைக்கும் மொழிபெயர்ப்புக்கும் செய்த தொண்டுகள் அளப்பில! அவர்களை என்னால் மறக்கவே முடியாது, தமிழ்மரபு பேணிய தமையவர்அவர். அவர்கள் இலத்தீனியம், கிரேக்கம். யப்பானியம் முதலிய மொழிகளையும் ஆங்கிலத்துடன் கற்றிருந்தமை அவர்களின் வன்மையைப் பெருக்கிக் கொண்டிருந்தது.

யான் மாணவனாக இருந்த காலத்திலேயே அவர்கள் வாலிபராயிருந்து மகாநாடுகள் நடாத்தியமையும். இந்திய நாட்டுப் புகழாளர்களை அழைத்து விரிவுரைகள் செய்வித்து வந்தமையும் இன்றும் எனக்கு நினைவில் இருக்கின்றன சிறந்தவராகப் பிறந்துவளர்ந்த அமரர் பேரின்பநாயகம் நடைவில் "வள்ளுவம்" சார்ந்து "காந்தீயம்" பரப்பி சைவருக இயன்றமை என்றும் என் மனதைவிட்டகல்வதில்லை. அவருடைய கதருடையிலே எனக்கு நீங்காத ஆசை.

நீண்டு உயர்ந்த புருவம்; பரந்து விரிந்த நெற்றி; கூரிய கண்கள்; செம்மை சந்த பேச்சு; பழமைபோற்றும் பண்பு; ஆன்றமைந்த பேரறிவு; மதிநுட்பம்; பன்மொழியறிவு. இவையாவும் ஒருங்கே அமைந்த தோற்றம். இனி யாம் காணமுடியாதது. காண்பது எப்படி?


## நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

கேக் தயாரிப்புக்கு தேவையான இறக்குமதி செய்யப்பட்ட

சுல்தானஸ் — (Four crown Australian)
கரன்ஸ் — ,, (Australian
வைற் றேசன்ஸ் (With Seed and (Seedless)
கறுப்பு றேசன்ஸ் (Saileras)
ஈச்சம்பழம் (Date white)

இலங்கையில் மிகவும் முன்னோடிகளால் தயாரிக்கப்பட்ட

சாள்ஸ் தயாரிப்புகள் (Charles Products)

செரீஸ் - கன்டீல்
ஜிஞ்சர் - செவ்சொவ்
புலக்தாசி - ஜாம்வகைகள்
ரவ்வை - பேக்கிங் பவுடர்
ஐசிங்சுகர் - சொவ்றீசுகர்
ஜெலீ - கொக்கோபவுடர்
ஒஸ்ரேலியா மாஜரீன்

இறக்குமதி செய்யப்பட்டதும் உள்ளூர் தயாரிப்பும்

கேக் எசன்ஸ் - கலரிங் வகைகள்

குளிர்பானத்திற்கேற்ற இறக்குமதி செய்யப்பட்டதும் உள்ளூர் தயாரிப்பும்

கோடியல் - எமல்சன் வகைகள்

கேக் அலங்காரப் பொருட்கள் (Cake Decoration)

நத்தார் கேக் அலங்காரப் பொருட்கள், நத்தார் புதுவருட அன்பளிப்புப் பொருட்கள், நத்தார் பொதிப்பேப்பர் ஆகிய பொருட்களை

ஒரே இடத்தில் மிக மலிவாகவும், தரத்தில் சிறந்ததுமாக, பெற்றுக்கொள்ள தலைநகரில் தனிச்சிறப்புடன் திகழும் ஒரே ஸ்தாபனம்:

# பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்

223, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24823
[A 3239]

தலைமை அலுவலகம்
18/1 டாம் வீதி,
கொழும்பு - 12.
தொலைபேசி: 26235 - 549269



உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான அக்ஷய வருடம் கார்த்திகை மாதம் 26ம் நாள் (12-12-1986) வெள்ளிக்கிழமை மு.ப. 7-30 மணிமுதல் 9-00 மணிவரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| எனது புத்திரன் | எனது புத்திரி |
| --- | --- |
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| சுப்பிரமணியம் | ரேணுகாதேவி |
| (மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்) | (அரசினர் வைத்தியசாலை யாழ்ப்பாணம்) |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

நல்லூர் சிவன்கோவிலில் நடைபெற இருக்கும் திருமணவைபவத்திற்குத் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி
பா. சுப்பையா
ஆவரங்கால்,
புத்தூர்
(C 6298)

திருமதி
நா செல்வரட்ணம்
358, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பக்கம் 4

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

11-12-86 வியாழக்கிழமை

## தமிழ் அகதிகளுக்கு கடனுதவி

சென்னை, டிச. 10

இலங்கையில் இடம்பெற்று வரும் பல்வேறு அசம்பாவிதங்களினாலும் பாதிக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களிற்கு மாநில அரசின் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்க தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. (இ)

## ★ எந்தவொரு மனிதனும் — தான் விரும்பும் அமைப்புடன் இணைவதை எவரும் தடுக்கமுடியாது

திருநெல்வேலி, வியாழன்

"எந்தவொரு தனி மனிதனும் தான் விரும்பும் கொள்கை தனது கருத்தைக் கொண்ட அமைப்புகளுடன் இணைவதையும், எடுத்துக்கூறுவதையும் எந்தவொரு அராஜக நடவடிக்கையாலும், எந்த சக்தியாலும் தடுத்துவிடவோ அழித்துவிடவோ முடியாது" என்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தினக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர் ஈசன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்; "ஆயுதங்களின் தொகையில்தான் ஒரு நாட்டின் அல்லது இனத்தின் வெற்றி தங்கியிருக்கவில்லை அப்படித் தங்கியிருக்குமாயின் அமெரிக்காவே இன்று உலகில் ஆட்சி செலுத்தும்.

ஆயுத பலத்தால், ஆயுத முனையில் தவறுகளுக்குத் தீர்வு காண நாம் என்றும் முற்பட்டதில்லை. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனக்கென ஒரு அரசியல் கோட்பாட்டைக் கொண்டு, உழைக்கும் மக்களின் பலத்தில் வளர்ந்து வருகிறது. உலகில் முதலாளித்துவ சிந்தனையுள்ள அமைப்புகளும் முற்போக்கான சோசலிச கொள்கையுடைய அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன" என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மனித உரிமைகள் வெகுஜன ஸ்தாபனம், பல்கலைக்கழக கலாசாரகுழு, கிராமிய தொழிலாளர் சங்கம், ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி பல்கலைக்கழக மாணவர் அமைப்புகுழு போன்றவற்றின் பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள். (ஈ)

## மரண அறிவித்தல்

### நாகம்மா ஐயாத்துரை

பெரிய மாவடி சாவகச்சேரியைச் சேர்ந்த நாகம்மா ஐயாத்துரை 7-12-86ல் காலமானார். இவர் காலஞ்சென்ற ஐயாத்துரையின் (இளைப்பாறிய தபால் ஊழியர்) அன்பு மனைவியும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 11-12-86 இன்று மாலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திருமதி பாலேந்திரன்.

[C 6321]

### மேரி யோசவ்

திருவாளர் மேரி யோசவ் காலமானார். அன்னார் வயலாவின் அன்புக் கணவரும், சகுந்தலா, கமலா, விமலா நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராஜன் பறியோ ஆகியோரின் அன்பு மாமனும், செல்லை, வனிதா, கவிதா, நீற்ரு, றிக்காடோ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 12-1-86 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கரம்பன் சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(C 6308)

### திருமதி சிற்றம்பலம் பத்தினிப்பிள்ளை

கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற தபால் அத்தியட்சகர் வீ. க சிற்றம்பலம் அவர்களின் அன்பு மனைவி பத்தினிப்பிள்ளை இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர், சிவஞானசுந்தரம் (சிறீதிரன்), சுந்தரேஸ்வரி சிவலோகசுந்தரி, யோகேஸ்வரி, அரசரத்தினம் (லண்டன்), புஷ்பதேவி, திலகவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் கோகிலம், முத்துத்தம்பி, சுப்பிரமணியம், பாலசிங்கம் சரோஜா, தங்கராஜன், செல்வகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜீவகன் வானதி, சிறீவாணி, சிறீதரன்-மாதினி, சிறீஜயந்தா-ஏலிஸ் இராதிகா-நிருபன், வந்திகா-சிவகுமார் மங்கலிக்கா, சுறேக்கா, அஞ்சலிக்கா, சிவாஜினி-ஆனந்தகணேசன், இராஜினி-சிவதாசன், மயூரன், யாழினி, சோபனா, சுகன்யா, சுனீத்தா, திருநீலன் சிற்றுமி ஆகியோரின் அன்புப் பாட்டியாரும், ராஜீவ், பிரதீவ், காவின், நிலாணி, கோகுலன் ஆகியோரின் அன்புப் பீட்டியுமாவார். மறைந்த அன்னையின் இறுதிக்கிரியைகள் (10-12-86) புதன்கிழமை பி ப 2 மணிக்கு கரவெட்டி அரசடிச் சந்தியிலுள்ள திருமதி சுந்தரேஸ்வரி முத்துக்தம்பியின் இல்லத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினருக்கு அறியத்தருகிறோம்.


அரசடி, கரவெட்டி. அன்னையின் குடும்பத்தினர்.

(C 6296)

### வல்லிபுரம் பொன்னுத்துரை (J P)

(சந்நிதி முருகன் லொறி உரிமையாளரும், முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்)

தோற்றம்: 07-12-1933 மறைவு: 10-12-1986



வல்லிபுரம் பொன்னுத்துரை (J P) காலமாகிவிட்டார். இவர் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், சிவகுமார் (லண்டன்), மஞ்சுளா, அஞ்சலா, ஜெயந்தினி, சுரேன், சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரியைக்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து 11-12-86 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இங்ஙனம்,
மனைவி, மக்கள்.

பருத்தித்துறை வீதி,
3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

C 6320

## சுதந்திர---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க காங்கிரஸ் செனட் சபையின் உப குழுவின் தலைவர் திரு. சொலஸ் அடுத்த வாரம் இரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வருகிறார். இவர் மனித அடிப்படை உரிமைகளுக்காகப் போராடி வருபவர்.

இதற்கிடையில் இலங்கையில் மனித அடிப்படை உரிமைகள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்துள்ள 'இலங்கையில் காணாமல் போனவர்கள்' பற்றிய அறிக்கையினை மறுத்து பிரசாரங்களை மேற்கொள்ள இலங்கை அரசுப் சில எதிர்க்கட்சிகளும் அனைத்துலக பிரசாரமொன்றை தனித் தனியாக மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளன.

இலங்கையில் மனித அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு வருவதால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகளை நிறுத்தப் போவதாகக் கூறி வரும் அனைத்துலக அபயஸ்தாபனங்களையும் எச்சரித்து வரும் நாடுகளையும் வன்மையாகக் கண்டித்து ஜனாதிபதி ஜெயவர்த்தன கடந்த சிலதினங்களுக்குமுன் கொழும்பில் நடைபெற்ற விஞ்ஞானத் துறை பற்றிய மகாநாடொன்றில் உரையாற்றியுள்ளார்.

மேலும் பிரிட்டிஷ் அரசு இலங்கையில் சமநலவேவ அணைக்கட்டுத் திட்டத்திற்கு 106 மில்லியன் ஸ்டேலிங் பவுண் நிதி உதவியை கடனாக வழங்க வுள்ளதையும் இதுவரை வழங்கிவந்தபல உதவிகளையும் பல நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளன. எனினும் இவ்வாறான உதவிகளைத் தான் நிறுத்தப் போவதில்லையென பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை நியூயோர்க்கில் நடைபெறவுள்ள கருத்தரங்கொன்றில் இலங்கை பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இலங்கையில் மனித உரிமைகள் பற்றிய விடயம்குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த இரு உறுப்பினர்களுடன் விவாதிக்க உள்ளார்.

மனித உரிமைகள் மீறப்படுவது குறித்த சகல முறையீடுகளையும் புகார்களையும் கேட்பதற்கென இலங்கையில் எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த பத்து உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிக்கப் போவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. [சி]

## இனப்படுகொலை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் தினந்தோறும் சராசரியாக பத்துமுதல் பதினைந்து தமிழர்கள் கொல்லப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறாக இலங்கை அரசு பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டிருப்பதால் தனிஈழம் என்ற தங்கள் இலட்சியத்தை அடைய தமிழ் போராளிகள் ஆயுதப்போராட்டம் நடாத்த வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட பல அரசியல் பிரமுகர்கள் கருத்துதெரிவிக்கையில்: தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த இந்தியா உடனடியாக இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறியுள்ளனர்.

தங்களது தாயகம் தவிர அதற்கு குறைவான எதனையும் தமிழ் விடுதலை இயக்கங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டாதென தமிழீழ விடுதலை அணியின் பொதுச்செயலாளர் திரு எம். கே. ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட போராளிகள் பேச்சாளர் ஒருவர் உரையாற்றுகையில்: இந்தியாவிற்கு திரான பல சக்திகள் இந்தியாவின் பெருமைக்கு மாசு கற்பிக்கும் வகையில் இனப்பிரச்சினையில் இலங்கைக்கு உதவி வருவதாகக் குறிப்பிட்டார். (சி)

## இந்தியன் ஓவ்'ஸீஸ் வங்கியில் இருவர் கொலை

சென்னை டிச 10

திருச்சி மாவட்டம் ஜெயம் கொண்டம் அருகே உள் கோட்டை கிராமத்தில் இந்தியன் ஓவசியஸ் வங்கிமுகாமையாளரும் பதிவாளரும் இனந் தெரியாத கோஷ்டி ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

## 4 வீடுகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தின் போது மேலும் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. (மா)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசா இரத்தினம்

இணுவிலைச் சேர்ந்த திருமதி இராசா இரத்தினம் காலமானார். அன்னார் அம்பலவாணர் இராசாவின் மனைவியும், கனமலர், நேசமலர், பாலச்சந்திரன் ஆசிரியர் (முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம்) தனபாலசிங்கம், கலாவல்லி ஆகியோரின் அன்புத் தாயாரும், தில்லை நடராசா, இராமநாதன், இராஜேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் சிவமாலா, சேதீஸ்வரி, பிரசன்னா, யாழினி, கோகுலன் பிரவீனா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11-12-1986) வியாழன் பகல் 12 மணியளவில் பூவோடை மயானத்தில் நடைபெறும். உற்றார் உறவினர் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

(C 6319) தகவல்; பாலச்சந்திரன்.

### நமசிவாயம்பிள்ளை சிவபாதசுந்தரம்

(ஓய்வுபெற்ற செயலாளர், மலேரியாத் தடுப்புப் பகுதி)

வியாபாரிமூலை நமசிவாயப்பிள்ளை சிவபாதசுந்தரம் காலமானார். இவர் இரத்தினநாயகியின் அன்புக் கணவரும், சி. சோமபாலன் (படப்பிடிப்பாளர்), டாக்டர் சிவசந்தநதன் (SHS, பதுளை), சி. சுந்தரேசன் (ஆசிரியர், புனித ஹென்றி அரசர் கல்லூரி இளவாலை), பத்மதேவி ஆசிரியை மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை, வியாபாரிமூலை), சி அருட்சோதி (ஆசிரியர், சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை) டாக்டர் செல்வி சி உமா (அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு வெ. சிவானந்தஜோதி (மகாராஜா நிறுவனம், கொழும்பு), சோ புவனேஸ்வரி, வ. மனோன்மணி (ஆசிரியை, ஞான பண்டித வித்தியாலயம், கொக்குவில்), சு பத்மஜோதி (இலங்கைவங்கி, யாழ். பிராந்திய அலுவலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு ந தணிகாசலம் பிள்ளை, திரு ந ஆழ்வாப்பிள்ளை, திருமதி சே திருநாவுக்கரசு (இல: 19, I B C வீதி, வெள்ளவத்தை), திருமதி தேவகுருநாதன், காலஞ்சென்ற திருமதி சிவகுருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் வியாபாரிமூலையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (11-12-1986) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கின்றோம்.

தகவல்:
வியாபாரிமூலை. சி. சுந்தரேசன்.
(C 6314)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100381 Eelanadu P O Box 49 Telegram Eelanadu Telephone 22389— 24126